# இலங்கை நூலகச்சங்கம் செய்திமடல்

தொகுதி – 37 இல. 02 ஐப்பசி – மார்கழி 2020 ISSN 1391 -2531

## நூலகச் சங்கத்தின் 1வது சபைக்கூட்டம்





இலங்கை நூலகச் சங்கத்தின் 2020/2021 ஆண்டிற்கான முதலாவது சபைக் கூட்டம் அனுராதபுரத்திலுள்ள மஹாகெதற பமிலி இன் விடுதியில் ஒக்டோபர் 3ந் திகதி நடைபெற்றது. சபைக்கூட்டத்தின் கால்கோள் விழாவில் சங்கத்தின் தலைவர், முன்னாள் தலைவர், மற்றும் அழைக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆகியோருடைய பெறுமதி மிக்க உரையாற்றுகைகள் இடம் பெற்றன. இந்நிகழ்வானது இலங்கை நூலகச் சங்க வரலாற்றில் இது ஒரு வரலாற்றுப்பதிவாகும் என ரஜரட்டைப் பல்கலைக்கழக நூலகர் திருமதி. ஏ.எஸ் சிறிவர்தன குறிப்பிட்டார். சங்கத்தின் சபைகுழுவினர் தவிர வணக்கத்திற்குரிய போதாகம சுமண தேரர், சிரேஷ்ட விரிவுரையாளர் பிக்குகள் பல்கலைக் கழகம், திருமதி. ஆர். சுமத்பால, நூலகர் பொது நூலகம் அனுராதபுரம், திருமதி ரீ.எம்.ஏ.பீ. தென்னக்கோன், நூலகர் புராதன தொழில் நுட்ப நூதனசாலை, பொலனறுவை, திரு அசோக ராஜபக்ஷ, தலைவர் நூலக சேவைகள் சபை, வடமத்திய மாகாணம், திருமதி வாசனா டில்ருக்ஷி, பணிப்பாளர் நூலகசேவைகள் சபை, வடமத்திய மாகாணம், மற்றும் திருமதி. ஏ..எஸ். சிறிவர்தன, நூலகர், ரஜரட்டைப் பல்கலைக்கழகம் ஆகியோரும் சபைக் கூட்டத்தின் ஆரம்ப விழாவில் கலந்து கொண்டனர்.





## பஹன் பூசை வழிபாடும் ஆசீர்வாத வைபவமும்

ஒக்டோபர் 3ந் திகதி நடைபெற்ற முதலாவது சபைக் கூட்டத்தின் பின்னர் மாலையில், இலங்கை நூலகச் சங்கத்தின் 60வது ஆண்டுவிழாவை நினைவு கூரும் முகமாக விசேட பகன் பூசை வழிபாடு மற்றும் ஆசீர்வாத நிகழ்வு ஒன்று ருவான் வெலிசாய வளாகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இலங்கை நூலகச் சங்கத்தின் சபை உறுப்பினரகள், சங்க உறுப்பினர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களும் இதில் பங்கேற்றனர்.









## உள்ளே....


| | |
|---|---|
| நூலகச் சங்கத்தின் 1வது சபைக்கூட்டம் | 01 |
| பகன் பூசை வழிபாடு மற்றும் ஆசீர்வாத நிகழ்வு | 01 |
| திருமதி ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் சிவனேசன் அவர்களின் ஓராண்டு நினைவு | 02 |
| கொழும்பு பொது நூலகம் - நிகழ்நிலை (Online) நிகழ்வுகள் | 02 |
| இலங்கை நூலகச் சங்கத்தின் விதிகளின் திருத்தம் | 02 |
| நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறியின் பெயர் மாற்றம் | 03 |
| நூலக ஆராய்ச்சி நிகழ்வு 2020 - பிரதான நூலகம் - கொழும்பு பல்கலைக்கழகம் | 04 |
| நூலகச் சங்க வெளியீட்டுக் குழு 2020/2021 | 04 |
| அறிவித்தல் | 04 |
| செய்தி மடலுக்கான செய்தித் துணுக்குகள். தொகுதி 37(3) - தை - பங்குனி 2021 | 04 |




*Sri Lanka Library Association, Organization of Professional Associations, Sri Lanka, 275/75, Stanly Wijesundara Mawatha, Colombo 07, Sri Lanka, Tel/Fax: +94-11-2589103, Email:slla@sltnet.lk*

## மறைந்த திருமதி ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் சிவனேசன் அவர்களின் முதலாவது ஆண்டு (முன்னாள் தலைவர் இலங்கை நூலகச் சங்கம்)






மறைந்த முன்னாள் நூலகர் திருமதி ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் சிவனேசன் அவர்களின் ஓராண்டு நினைவை ஒட்டி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் கடந்த மார்கழி மாதம் 25ந் திகதி நினைவுப் பேருரையை மெய்நிகர் மூலமாக (virtual) ஒழுங்கு செய்திருந்நதது. இவரது ஞாபகார்த்த உரையை கலாநிதி திருமதி விசாகருபன் அவர்கள் நிகழ்த்தினார. அவரது அவரது ஓராண்டு மறைவை நூலக சமூகம் நினைவு கூர்ந்தது. கடமையிலிருந்த போதே மாரடைப்புக் காரணமாக கடந்த மார்கழி மாதம் 25ந் திகதி அவர் காலமானார். மிகவும் அர்ப்பணிப்புடனும் கடும் உழைப்புடனும் வாழ்ந்த அவர் மிகவும் துணிவுள்ளவர்.அவர் மறைந்தாலும் அவருடைய எழுத்தாக்கங்களும் ஆவணங்களும் அவருடைய தொலைநோக்கினை தொடர்ந்து சொல்லிக்கொண்டே இருக்கும். அவருடைய பண்பானது தனித்துவம் மிக்கது. தகவல் அறிவியலுக்கான அவரது ஆர்வமும் அர்ப்பணிப்பும் விதி விலககானவை. புன்முகப்பட்ட பங்குகளில் எவ்வித பலனும் எதிர்பாராமல் செயற்பட்டவர்

## கொழும்பு பொது நூலகம் - நிகழ்நிலை (online) நிகழ்வுகள்

கொழும்பு பொது நூலகமானது கொவிட் 19 தொற்று நோய் காரணமாக நூலகம் மூடப்பட்டிருந்த காலத்தில் பல்வேறு நிகழ்நிலை (online) நிகழ்வுகளை நடாத்தியது. இந்நிகழ்வுகள் அனைத்தும் Zoom மற்றும் ஏனைய ஊடகந்கள் வழியாக நடாத்தப்பட்டன. மேலும் PDF வடிவில் உள்ள பதிப்புரிமை அற்ற நூல்கள் பல முகநூல் மற்றும் டிடழபளிழவ வழியாக பொழுது போக்கு வாசிப்பிற்காக சுழற்சி முறைப்படுத்தப்பட்டன. சஞ்சிகைகளிலுள்ள தெரிவு செய்யப்பட்ட பருவ இதழ் கட்டுரைகள் தந்திப் பிரயோகம் (Telegram app.) மூலம் வழங்கப்பட்டன. “வாசிப்போம்” எனும் நடைமேடை ஊடாக கதை சொல்லும் நேரம் நடாத்தப்பட்டது. இந்நிகழ்விற்கு ஆசியா






நூலக மேக்கர்ஸ்பேஸ் நிகழ்வு

## இலங்கை நூலகச் சங்கத்தின் விதிகளின் திருத்தம்

இலங்கை நூலகச் சங்கத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் இறுதியாக 2014ஆம் ஆண்டில் மீள்திருத்தம் செய்யப்பட்டமையால், அவற்றை மீண்டும் திருத்தம் செய்யவேண்டும் என்ற தேவை நீண்ட காலமாக உணரப்பட்டு வந்தது. ஆகையால் 2004ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க இலங்கை நூலகச் சங்கத்தின் (ஒருங்கிணைப்பு) (திருத்தம்) சட்டம் மற்றும் 1974ஆம் ஆண்டின் இலங்கை நூலக சங்கச் சட்டம் 20 உடன் இணைவாக இந்த விதிகளைத் திருத்துவதற்கென கொமெஸ்ப் (COMAISP) அமைப்பினால் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. திருத்துவதற்கு அல்லது அறிமுகப்படுத்துவதற்கான குழுவின் முன்மொழிவுகள் மற்றும் பரிநதுரைகள் பின்வருவனவற்றை உள்ள்டக்குகின்றன. இலங்கை நூலகச் சங்கத்தின் மூதவை மற்றும் நிர்வாக சபை ஆகியோரின் பொறுப்புக்கள் பற்றிய தெளிவான விளக்கமும் சேர்க்கப்பட உள்ளது. விதிகள் துணை சட்டங்கள் என மறுபெயரிட முன்மொழியப்பட்டுள்ளன. வருடாந்த பொதுக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானங்களையும் இலங்கை நூலகச் சங்கத்தின் கடந்த மூதவைக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளையும் (ஏதேனும் இருந்தால்) இவ்விதிகளில் இணைப்பது அவசியமாகும். அத்தகைய பதிவுகளை பதிவு செய்வது மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் மற்றும் நிறுவனங்கள் போன்ற புதிய அங்கத்துவங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இணைசாரா (Non - Corporate) அங்கத்துவத்திற்கான எழுத்து மூலமான கொள்கை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். குழுக்களுக்கான முன்மொழிவாளர்கள் (Convener) மற்றும் குழு அங்கத்துவத்தினர் ஆகியோரைத் தேர்ந்தெடுப்பதற்கான முறையை மேம்படுத்துவதற்கான முறையும் இன்னொரு திட்டமாகும். த ந்திரோபாய திட்டமானது புதுப்பிக்கப்பட்டு மற்றொரு கால கட்டத்திற்கு தயாரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. தலைவரும் (President) தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரும் (President - Elect) தங்களது திட்டங்களை தந்திரோபாய திட்டங்களின் அடிப்படையில் தெளிவான கால அளவுகளுடன் வகுக்க வேண்டும்.

## நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறியின் பெயர் மாற்றம்

இலங்கை நூலக சங்கத்தினால் வழங்கப்படும் டிப்ளோமா கற்கை நெறியானது நீண்டகால வரலாற்றைக் கொண்டது. இக்கற்கை நெறியானது அறுபதாவது (60 ஆவது) ஆண்டு நிறைவை 2021 ஆம் ஆண்டில் கொண்டாடுகிறது. இச்சுருக்கக் குறிப்பானது தற்போது வழங்கப்படும் இக்கற்கை நெறியினை விபிரிப்பதற்கு உகந்ததாக அமைகிறது. இக் கற்கை நெறியானது 1961 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அந்தந்தக் கால நூலக தகவல் துறையின் சூழ்நிலைத் தேவைகள் காரணமாகவும், இந் நாட்டின் கல்விச் சீர்திருத்தங்களைப் பேணும் முகமாகவும், இந்த டிப்ளோமா கற்கை நெறியின் தலைப்பானது பல தடவைகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (அட்டவணை1 ஐப் பார்க்கவும்). இக்கற்கை நெறியின் கடைசி மாற்றம் 2020 இல் ஏறபடுத்தப்பட்டது. இப்போது, அட்டவணை 2இல் காட்டப்பட்டுள்ளபடி இருநிலைகளில் வழங்கப்படுகிறது. (அட்டவணை 2 ஐப் பார்க்கவும்). இதன்படி நூலக மற்றும் தகவல் விஞ்ஞான டிப்ளோமா (DLIS) கற்கை நெறியானது 15ஆந் திகதி பெப்ரவரி மாதம் 2020 இலிருந்து நூலக மற்றும் தகவல் விஞ்ஞான டிப்ளோமா (DLIS) என்றும், நூலக மற்றும் தகவல் விஞ்ஞான உயர்டிப்ளோமா (HDIPLIS) என்றும் பிரிக்கப்பட்டுள்ளன. இது இலங்கை தகுதிக் கட்டமைப்பின் (SLQF) 2015 ஆவது பதிப்புடன் இணக்கப்பாடானது. மூன்றாம் நிலைக் கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) தேசிய தொழில் தகுதி நிலைகள் (NVQ) திட்டத்தினை நிலைகளிற்கு அதிகாரபூர்வமாக ஒதுக்கவில்லை. எனினும், நாம் இலங்கைத் தகுதிக் கட்டமைப்பில் லிபரிக்கப்பட்டுள்ள இணையான நிலைகளை இங்கு பயன்படுத்தியுள்ளோம். நூலக தகவல் விஞ்ஞான தகுதிகளை தேசிய தரத்திற்கு இணையாக தரப்படுத்துவதற்காக இலங்கை நூலகசங்கமானது பிற நூலக தகவல் விஞ்ஞான கல்வி நிறுவனங்களுடன் இணைந்து, மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்விஆணைக்குழுவுடன் சேர்ந்து தொழிற்பட்டுக் கொண்டு இருக்கிறது அட்டவணை 2 இல் உள்ள முதல் இரண்டு நிரல்களில் கற்கை நெறியின் தலைப்பு மாற்றங்கள் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன தொடர்ச்சியாக இக்கற்கை நெறியை பூரணப்படுத்தப்படும் காலப் பகுதி மூன்று ஆண்டுகள் ஆகும். ஒரு மாணவர் நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறியை அதி கூடியது மூன்று (3) ஆண்டுகளில் முடித்தல் வேண்டும். நூலக தகவல் விஞ்ஞான உயர் டிப்ளொமா கற்றை நெறியினை அதி கூடியது ஐந்தாண்டுகளில் பூரணமாக முடித்தல் வேண்டும். அட்டவணையின் இறுதி நிரலில் இரண்டு கற்கை நெறிகளினதும் (DLIS & HDIPLIS) பூரணப்படுத்தப்பட்ட நிலையில் வெளியேறும் நிலை காட்டப்பட்டுள்ளது. வெற்றிகரமாக குறித்த கற்கை நெறியை பூரணப்படுத்துவோருக்கு இறுதியில் டிரான்ஸ்கிறிப்டும் (transcript) கற்கை நெறிக்குரிய சான்றிதழும் வழங்கப்படும். HDIPLIS (1), மற்றும் HDIPLIS (II) ஆகியவை உயர் டிப்ளோமாவில் பங்களிப்புச் செய்கின்றன. இதனால் HDIPLIS (I) வெளியேறும் இடமல்ல. ஆகையால், HDIPLIS இற்கு பதிவு செய்யப்பட்ட ஒரு மாணவர், HDIPLIS (I) தேர்வை வெற்றிகரமாக முடித்தவுடன் மட்டுமே கல்விசார் டிரான்ஸ்கிரிப்பை வைத்திருக்க முடியும். இம்மாற்றங்கள் காரணமாக பிறநிறுவனங்களால் வழங்கப்படும் கற்கை நெறிகளுடன் ஒப்பிட்டு மாணவர்களிற்கு இந்நூலக தகவல் விஞ்ஞான கற்கை நெறி குறித்து தெளிவான விளக்கம் இருக்கும் என நம்புகிறோம். மேலும், பட்டம் மற்றும் மேற் பட்டப் படிப்பு தகுதிகளைப் பெறுவதில் முன்னேற்றமான வழியை மாணவர்கள் தெளிவாகக் காணலாம். முடிவில், நாங்கள் உங்களிற்கு ஞாபகமூட்ட விரும்புவது உயர் டிப்ளோமா கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்கள்.

**அட்டவணை 1: இலங்கை நூலக சங்கத்தினால் வழங்கப்படும் மூன்று நிலை டிப்ளோமா கற்கை நெறியின் பெயர் மாற்றங்கள்**

| ஆண்டு | மூன்று நிலைகளிற்கான பெயர்கள் |
|---|---|
| 1961 | அ) இலங்கை நூலக சங்கத்தின் முதற்தேர்வு<br>(சில நேரங்களில் நூலகவியலிற்கான முதற்தேர்வு என்று பெயரிடப்பட்டுள்ளது)<br>ஆ) இலங்கை நூலக சங்கத்தின் இடைநிலைத்தேர்வு<br>இ) இலங்கை நூலக சங்கத்தின் இறுதித்தேர்வு |
| 1998 | பாடத்திட்ட திருத்தத்துடன் பெயர்களை மாற்றுதல்<br>அ) நூலக மற்றும் தகவல் விஞ்ஞான டிப்ளோமா – நிலை I<br>ஆ) நூலக மற்றும் தகவல் விஞ்ஞான டிப்ளோமா – நிலை II – I<br>இ) நூலக மற்றும் தகவல் விஞ்ஞான டிப்ளோமா – நிலை II - II |
| 2008 | நிலை II – I உம் நிலை II – II உம் முறையே நிலை II, நிலை III ஆக மீண்டும் பெயர் மாற்றப்பட்டுள்ளது.<br>அ) நூலக மற்றும் தகவல் விஞ்ஞான டிப்ளோமா – நிலை I<br>ஆ) நூலக மற்றும் தகவல் விஞ்ஞான டிப்ளோமா – நிலை II<br>இ) நூலக மற்றும் தகவல் விஞ்ஞான டிப்ளோமா – நிலை III |
| 2020 | இம் மூன்று நிலைகளையும் இரண்டு கற்கைநெறிகளாக மீண்டும் பெயரிடப்பட்டுள்ளது.<br>அ) நூலக மற்றும் தகவல் விஞ்ஞான டிப்ளோமா (DLIS)<br>அ) நூலக மற்றும் தகவல் விஞ்ஞான உயர்டிப்ளோமா (HDIPLIS) – (I)<br>இ) நூலக மற்றும் தகவல் விஞ்ஞான உயர்டிப்ளோமா (HDIPLIS) – (II) |

**அட்டவணை 2: இலங்கை நூலக சங்கத்தால் தற்போது வழங்கப்படும் டிப்ளோமா மற்றும் உயர் டிப்ளோமா கற்கை நெறியின் விபரங்கள்.**

| கற்கைநெறியின் முன்னைய பெயர் | தற்போதையபெயரும் சுருக்கக் குறியீடும் | பெற்ற தகுதிகள் | SLQF நிலை | இணையான NVQ நிலை * | வெளியேறும் நிலையும் வழங்கப்படும் வரவுகளும் (Credits) |
|---|---|---|---|---|---|
| நிலை 1 (DIPLIS) | டிப்ளோமா **(DLIS)** | நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா | SLQF 03 | NVQ 05 | 30 வரவுகள் வெளியேறும் நிலை டிரான்ஸ்கிரிப(Transcript) + டிப்ளோமா சான்றிதழ |
| நிலை II | உயர்டிப்ளோமா LIS I **HDIPLIS (I)** | - | - | - | (டிரான்ஸ்கிரிப் மட்டும்) |
| நிலை II | உயர்டிப்ளோமா LIS பகுதி II **HDIPLIS (II)** | நூலக தகவல் விஞ்ஞானத்தில் உயர் டிப்ளோமா | SLQF 04 | NVQ 06 | 30 வரவுகள் ** வெளியேறும் நிலை (டிரான்ஸ்கிரிப் + உயர் டிப்ளோமா சான்றிதழ்) |

*** based on SLQF (2015)** **** Levels II and III together contribute to the Higher Diploma**

தற்போது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் நூலக தகவல் விஞ்ஞான கௌரவ (Honors) பட்ட கற்கை நெறியில் இணைய தகுதியானவர்களாக முடியும். அதே நேரம் இக்கற்கை நெறியில் முதல் இரண்டு ஆண்டு விலக்கு அளிக்கப்படும். ஆகவே, இம்மாணவர்கள் கௌரவப் பட்டத்தை (Honors degree) இரு வருடங்களில் பெறமுடியும். மேலும், இலங்கை நூலகச்சங்கத்தால் வழங்கப்படும் டிப்ளோமாதாரிகள் ஏனைய தொழில்முறை உறுப்பினர்களுடன், கொழும்பு பல்கலைக்கழக, நூலக தகவல் விஞ்ஞான தேசிய நிறுவனத்தினால் (NILIS) வழங்கப்படும் பின் பட்டப்படிப்பு (Postgraduate Courses) கற்கை நெறிகளிலும் இணைந்து கொள்ள முடியும்.



**கலாநிதி. சீ.என.கே. சம்பா அளகக்கோன்**
**கல்வி அலுவலர்**
சிரேஷ்ட உதவி நூலகர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

# நூலக ஆராய்ச்சி நிகழ்வு 2020





கொழும்புப் பல்கலைக்கழக நூலக வலையமைப்பானது அதன் மூன்றாவது ஆண்டுத் தொடராக 2020 ஆண்டுக்கான நூலக ஆய்வு நிகழ்வை "அறிவுச் சகாப்தத்தில் நூலக சேவைகளின் மீள் அமைப்பு" எனும் தலைப்பில் கடந்த டிசம்பர் மாதம் 23ந் திகதி நிகழ்நிலை முறையில் நடாத்தியது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினதாக கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சந்திரிகா விஜயரத்தின கலந்து கொண்டார். கௌரவ விருந்தினராக சிரேஷ்ட பேராசிரியர் பிரெமகுமார த சில்வா கலந்து கொண்டார். பேராசிரியர். ரமேஷ் சீ கோர், பீடாதிபதி (IGNCA), பணிப்பாளர் நூலகமும் தகவல் விஞ்ஞானமும்), தலைவர் – புது டெல்லி, இந்திரா காந்தி தேசிய கலை நிறுவனத்தின் கலா நிதிப் பிரிவு, அவர்கள் "நூலகம் ஒரு கற்றல் நிலையம், அதன் பங்களிப்பின் மீளமைப்பு மற்றும் இடவசதிகளின் மீளமைப்பு" எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். கலாநிதி.திருமதி பிரதீபா விஜேதுங்க அவர்கள் இந்த நூலக ஆய்வு நிகழ்வின் தலைவர் ஆவார்.

இரு கட்டங்களாக ஆய்வுகள் சமர்ப்பிக்கப்பட்டன. இவற்றிற்கு நடுவர்களாக கலாநிதி. என. டீ. விஜயசுந்தர, நூலகர் ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், கலாநிதி சீ.சீ. ஜயசுந்தர, நூலகர் களனிப் பல்கலைக்கழகம், திரு மகேஸ்வரன், நூலகர், பெரதேனியாப் பல்கலைக்கழகம், திரு. டபிள்யு. ஜே. ஜயராஜ், நூலகர் மட்டக்களப்பு பல்கலைக்கழகம் ஆகியோர் கடமையாற்றினர். கொழும்பு பல்கலைக்கழக நூலக கல்வி சார் பணியாளர்களால் பல ஆய்வுகள் சமர்ப்பிக்கப்பட்டன. பல்கலைக்கழகங்கள், பொது நூலகங்கள் மற்றும் தனியார் பிரிவுகளிலிருந்து

## இலங்கை நூலகச் சங்க வெளியீட்டுக் குழு 2020/2021

**பிரதான குழு**

தயானந்தி. சிறீதரன் (வெளியீட்டு அலுவலர்) சந்திமா வதசிங்க
கோமதி முருகதாஸ் — பீ.என். ஜீ. எஸ் பிரேமரத்ன
ஏம்.எஸ்எம் ஷிஹாம் — ஏ.வீ.எம்.கே. அன்கும்பர
பவிதாரா விஜயவர்தன

**செய்திமடல் – உப குழு**

திருமதி த. சிறிதரன் — திருமதி கயனி பெரேரா
திருமதி. கே முருகதாஸ்

**பருவ இதழ் – உப குழு**

திருமதி த. சிறிதரன் — பீ.என். ஜீ. எஸ் பிரேமரத்ன
சந்திமா வதசிங்க — எஸ். நவநீதகிருஸ்ணன்

## செய்தித் துணுக்குகள். தொகுதி தை - பங்குனி 2021

உங்களுடைய நூலகங்கள் தொடர்பான அனுபவங்கள், நடைமுறைகள் மற்றும் செயற்பாடுகளை தொடர்ந்து வெளியிடவுள்ள செய்திமடலில 37(3)ல் பிரசுரிப்பதற்கு அனுப்பி வையுங்கள். இதன் நோக்கம் எமது உறுப்பினர்களிடையே அவற்றை பரப்புவதும் பரிமாறுவதுமாகும். உங்கள் செய்திகளை ஆளு word கோப்பில் பதிவு செய்து பின்வரும் ஏதாவது ஒரு மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும் sritharan@lib.cmb.ac.lk or sllapublicationofficer@gmail.com

### அறிவித்தல்

**கட்டுரைகளுக்கான விண்ணப்பம் - இலங்கை நூலக மீளாய்வு (Sri Lanka Library Review) தொகுதி. 35. இல. 2**

இலங்கை நூலகச் சங்கத்தின் வெளியீட்டுக் குழுவினரால், இலங்கை நூலகச் சங்க உறுப்பினர்கள் மற்றும் புலமையாளர்களிடமிருந்து இலங்கை நூலக மீளாய்வு (Srilanka Library Review) தொகுதி 35. இல.2 ற்கான கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன. இலங்கை நூலக மீளாய்வு தூய மதிப்பாய்வுடன் வெளியிடப்படும். இப்பருவ இதழ் திறந்த அணுகல் முறையில் பெறக்கூடியது. தற்போது வருடம் இருமுறை வெளியிடப்படுகிறது. தொகுதி 35ன் 2வது வெளியீடு 2021ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் வெளியிடப்படும். இதற்கான கட்டுரைகள் பங்குனி 15ந்திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய எந்த மொழிகளிலும் கட்டுரைகளைச் சமர்ப்பிக்க முடியும். உங்கள் கட்டுரைகளை MS word கோப்பில் பதிவு செய்து வெளியீட்டு அலுவலருக்கு sritharan@lib.cmb.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது sllapublicationofficer@gmail.com எனும் முகவரிக்கோ அனுப்பி வைக்கவும் மேலதிக விபரங்களை இலங்கை நூலகச் சங்க இணைய தளத்தில் (www.slla.org.lk) பார்வையிட முடியும்.

### இலங்கை நூலக சங்க பேரவை உறுப்பினர்கள் 2020/2021

தலைவர்: கலாநிதி. ருவான் கமகே
உடனடி கடந்த கால தலைவர்: கலாநிதி.(திருமதி).என்.டீ.விஜயசுந்தர
தேர்வு செய்யப்பட்ட தலைவர்: கலாநிதி. ஆர்.டீ.ஆனந்த திஸ்ஸ
உப தலைவர் : திரு. அன்ரன் நல்லதம்பி
காரியதரிசி: கலாநிதி. திருமதி. கே.ஆர்.ஏ.என்.ஹர்ஷினி
உதவிக் காரியதரிசி: திருமதி. பிரியதர்ஷினி ஹேமகுமார
பொருளாளர்: திருமதி. வருணி கல்லபடாராட்சி
கல்வி அலுவலர்: கலாநிதி. செல்வி. சம்பா அளஹக்கோன்
உதவி கல்வி அலுவலர்: திருமதி. பிரியானி பாலசூரிய
வெளியீட்டு அலுவலர்: திருமதி. த .சிறீதரன்
தகவல் மற்றும் பொது தொடர்பாடல் அலுவலர்: கலாநிதி. எஸ்.கே. இலங்கரத்ன

### தொழில்வாண்மை சார் குழுக்கள்

கல்விசார் நூலகங்கள்: திரு. நோமன் ரவிக்குமார்
கொமெஸ்ப் : திரு.எஸ். சாந்தரூபன்
அரச நூலகங்கள்: திருமதி. யானிகா நந்தசேன
தேசிய நூலகம்: திரு. விஜய பிரேமதர்ஷன
மாகாண நூலகங்கள்: திருமதி. வஸந்தா குருப்பு
பொது நூலகங்கள்: திரு தம்மிக வீரக்கோன்
விசேட நூலகங்கள்: திருமதி. ரஞ்சனி ஹேரத்
பாடசாலை நூலகங்கள்: திருமதி. சந்திமா திஸநாயக்க

### பரிந்துரைக்கப்பட்ட சபை உறுப்பினர்கள்:

1. திருமதி. சிவந்தி வீரசிங்க
2. திரு. லால் பன்னிலா

### பரிந்துரைக்கப்படட நிருவாக்குழு உறுப்பினர்கள்:

1. திருமதி. சுனேத்ரா பெரேரா
2. செல்வி. ருக்மலி சேபாலிகா

**If undelivered please return to:**

Sri Lanka Library Association,
OPA Center,
275/75, Stanly Wijesundara Mawatha,
Colombo 07.

**To:**